**Previous Examination date – 12.03.2026**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 228 of 2022**

**Deposition of Witness P.W.8**

| | |
|---|---|
| **Name : திருமலைச்சாமி** | **Father/Husband's Name : திருமலைச்சாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 07.04.2026.**

**Accused present**.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது தாலுகா காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் விசாரணை அதிகாரி சார்பு ஆய்வாளர் திரு.முரளி அவர்களுடன் பணிபுரிந்துள்ளேன். சார்பு ஆய்வாளர் திரு.முரளி அவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். சார்பு ஆய்வாளர் திரு.முரளி தாலுகா காவல்நிலையத்தில் கடந்த 13.01.2021ம் தேதி நிலைய பொறுப்பில் இருந்த போது பழனி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் பழனி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சரவணக்குமார் என்பவரை விசாரித்து கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் புகார் வாக்குமூலம் பதிவு செய்து அன்றே நிலையம் வந்து நிலைய காவல்நிலைய கு.எண்.19/2022 பிரிவுகள் 294(b),323 இ.த.ச பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். தற்போது என்னிடம் காட்டப்படும் முதல்தகவல்அறிக்கை அவர் தயார் செய்தது தான். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.5 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** சம்பவயிடம் சென்று சாட்சிகள் சரவணன், வினோத் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தைப்பார்வையிட்டு பார்வைமகஜர் தயார் செய்து மாதிரிவரைபடம் வரைந்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும், அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். **மாதிரிவரைபடம் அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் எதிரியை தேடி வந்த

நிலையில் எதிரி மாண்பமை நீதித்துறை நடுவர், பழனி நீதிமன்றத்தில் ஆஜராகி பிணையில் சென்றுள்ளதால் கைது செய்யப்படவில்லை. பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் ரேவதி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு உ/இ காயச்சான்று பெற்றுள்ளார். **விபத்து பதிவேடு உ/இ காயச்சான்று அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பட்டியல் சாட்சி 1க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என காயச் சான்றளித்துள்ளார். பின்னர் இவ்வழக்கின் வாதியான பட்டியல் சாட்சி 1க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என காயச்சான்று வழங்கியதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவை 294(b),323 இ.த.ச விலிருந்து 294(b),325 ஆக சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தார். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள் 294(b),325 இ.த.சவின் கீழ் 09.05.2022ம் தேதி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

2. நான் ஆவணத்தின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகாரை முறையாக விசாரிக்காமல் காவல்நிலையத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்து பொய்யான குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், எதிரி குற்றமற்றவர் என்று சொன்னால் சரியல்ல.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.04.07 17:56:19 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.